REGD No. M 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10. | 16—9—51 | இதழ் 12.

"ஆசை, வெட்கம் அறியாது!"

"வீரர்களே! பசியோடு கிடக்கி ர்கள், பாதி உடைகூட இல்லை ங்கள் உடலில். பார்க்கும்போதே தாபப் படுகிறேன். வீரர்களுக் க இந்த வேதனை என்று நமது க்காரும் சஞ்சலப்படாமலில்லை. னல், என் செய்வது? நன்றியைத் விக்க முடியுமே தவிர, நல்ல வும், போதிய உடையும் தர லாத நிலையிலிருக்கிறோம்.

உங்கள் வீரமும், உறுதியும் இந் ட்டின் வெற்றிப் புதல்வர்களாக்கி ட்டன — உங்களை மக்கள், ராட்டுகின்றனர், மாவீரர்கள் எம் னோர் என்று. நானும் பூரிக் றேன்—உங்களுக்குக் கிடைத் ருக்கும் புகழுரை கேட்டு: புக ம் சிறப்பும் பெற்றீர்கள், ஆனால் ாதிய பலனும் சுகமும் கிடைக்க ல்லை! உங்கள் கஷ்டமும் ஏழ்மை ம் என் கண் முன்னே காட்சி ருகின்றன. கவலைப் படுகிறேன். னாலும் உங்களை அழைக்கிறேன் பாருக்கு — துணிவோடு, எனது தாழர்கள் என்கிற அன்போடு. வலை ஒரு பக்கம்! கடமை ஒரு பக் ம்!! வீரர்களே, கவலை பெரிதா, டமை பெரிதா? கிளம்புங்கள்! சல்வச் சிற்றாறுகளை நாம் தாண்டு வாம்!

சிங்கார நகரங்களை வீழ்த்து வாம்! 'சிந்து நதி'யும், 'ஆல்ப்ஸ லை'யும் நம் அடிபணியச் செய் வாம்! வீட்டுக் கவலையை ஒழியுங் —பிரெஞ்சு மாதா உங்களைத் நான் எதிர்பார்க்கிறாள். பொன்னும் புகழையும் அவள் பாதத்திலே கொட்டுவோம். மாற்றார், உங்கள் மாவீரத்தால் மருளவேண்டும். பிரான்ஸ் நாட்டின் புகழ் விளக்கு களே—உங்களுக்கோ தைரியத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டும்?"

* * *

சரித ஏட்டில், பதினேழாம் நூற்றாண்டை வீர எழுத்துக்களால் பொலியச் செய்த வெற்றிக் குரல் இது. அகில உலகையும் அலறச் செய்த மாவீரன் நேபோலியன் பதவியேற்று, படைகளை போருக்கு அழைக்க, இவ்வித கர்ஜனை எழுப்பினான். கவலையும் களைப்பும் கொண்டு கிடந்த பிரெஞ்சு வீரர்களை இந்த முழக்கம் வீராவேசம் கொள்ளச் செய்தது! ஏழ்மையை மறந்து, பசியைப் பற்றிக் கவலைப்படாது "போர்! போர்!" என்று சங்கநாதம் செய்தனர்.

'பிரெஞ்சுப் புதல்வர்களே, உங்களுக்கோ நான் வீரத்தைப் பற்றி விளக்கவேண்டும்?' என்ற, ஒரு வினா, அவர்கள் இதயங்களைத் தடவி, 'வெற்றி அல்லது வீர மரணம்' என்கிற வெறியையும் வீராவேசத்தையும் கிளறிற்று. பசியையும் வறுமையையும் மறந்தனர்! ஐரோப்பிய கண்டத்தையே அலறடித்தனர்!!

* * *

மாவீரன் நெபோலியன் குரல் வேதனை உள்ளங்களிலே வீரக் கனலை, மூட்டிற்று.

வீட்டிலே பசி, ஆனாலும் அவர்கள் கலங்க வில்லை. குடும்பங்களிலே கொந்தளிப்பு — நாட்டுப் பற்று அம்மாவீரர்களை நடுங்க விடவில்லை. மனைவியின் கண்ணீர்; விரோதிகளின் செந்நீரைக் குடிக்கத் தூண்டிற்று தவிர, தடை செய்யவில்லை! அவ்வளவு பாசம், தேசத்தின் மீது. அவ்வளவு பக்தி, பிரான்சின் மீது அதிகரித்தது. பாசத்தையும் பக்தியையும் 'வெறி'யாக மாற்றிற்று — மாவீரனின் வீரக் குரல்.

பிரெஞ்சு சாம்ராஜ்யம் உதயமாகச் செய்வோம்!" என்கிற வெறியோடு போராடினர்—போராடுமாறு, தூண்டிற்று, அந்த ஒரு குரல்.

"உங்களுக்கோ நான் தைரியத்தைப் பற்றி விளக்க வேண்டும்?"— இந்த ஒரு வாசகம், 'நமது நாட்டின் புகழெங்கும் பரவ வேண்டும்' என்ற ஓயா ஆசையைத் தூண்டி வேதனையில் திளைத்த வீரர்களை வீரா வேசங்கொள்ளச் செய்தது.

* * *

"நாம்"

"நம்முடையது"

இந்த வார்த்தைகளைக் காட்டி, வீரத்தையும் வெறியையும் கிளப்பி தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டவர்களின் பட்டியலை, அரசியல் வரலாறுணர்ந்தோர்; அறிவர்.

இந்த ஐக்கிய வாசகத்தால், மக்களுக்கு நன்மை தேடித்தந்தோரை

விட மாருக் கொடுமைக்காளாக்கி ஞேரே அதிகம்.

நாட்டுப் பற்றையும், அதில் மக்களுக்குள்ள அக்கரையையும், தங்களது ஆட்டக் காய்களாக வைத்து அரசியல் சூதாட்டத்தில் வெற்றி வீரர்களாகத் திகழ்ந்த, கொடுங்கோலர்கள் பலருண்டு; ஹிட்லர், முசோலினியைப் போல.

மக்கள் மன்றத்தில் உலவும், தேச பக்தியைக் கொழுந்துவிட்டெரியச் செய்வது; அதன்போர்வையில் தங்கள் சுயநல ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வது என்கிற பாதையில் சென்ற நாசகாலர்கள் அதிகம்.

வீரர்கள் பசியால் வெதும்புவது கண்ட நெபோலியன், வீசிய ஒரே வார்த்தை "உங்களுக்கோ நான் வீரத்தைப் பற்றி விளக்க வேண்டும்?"

அந்த ஒரு வாசகம், வேதனையை மறக்கடித்து அவர்களை வெறி கொள்ளச் செய்தது.

மக்களுடைய இதயத்தில் அழுந்திக் கிடக்கும் ஆசையைத் தடவிவிட்டு அதன் வேகத்தில் தங்கள் எதேச்சாதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் செயல் மிகவும் தந்திரமானது.

ராஜ தந்திரம், என்று கூறுவோரும் உண்டு, இந்த முறையை.

தூங்கிக் கிடக்கும் மக்களை பாயும் புலிகளாக்க இந்த தந்திரம் பயன் தந்ததுண்டு. தன் சொத்து பறிபோக, அதைக் காக்கும் திறமையிழந்து தவிக்கும் நிலைபெற்ற சமுதாயங்களை, இதுபோன்ற வீரக் குரல்கள், வீறுகொண்டெழச் செய்ததுமுண்டு.

அடிமைச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக் கிடந்த பல நாடுகள், 'நீங்களோ அடிமைகள்' என்கிற வீரமொழிகளால் ஆவேசம் கொண்டிருக்கின்றன.

"நாம் நாற்பது கோடி பேர், ஆறாயிரம் மைல்களுக்கப்பாலிருப்பவன் ஆங்கிலேயன். அவனுக்கா நாம் அடிமைகளாக வாழ்வது?" என்று, சுதந்திரக் குரல், எழுப்பியதன் விளைவாக, இந்திய பூமியில்,

ஓடிய இரத்த வெள்ளம், மனித உடலைத் துளைத்த துப்பாக்கி ரவைகள், துயரத்துக்கு ஆளானோர் தொகை, கணவரை யிழந்த கன்னியர், தனயனை மரணத்துக்குத் தந்த மாதாக்கள், கொஞ்சமல்ல; அதிகம், மிக மிக அதிகம்.

"நாமோ அடிமைகள்?" என்கிற வீரம், இந்திய பூமியில் புயலையும் பூகம்பத்தையும் எழுப்பிற்று.

அந்த எழுச்சியைத் தூண்டிய வீரத் தலைவர்களின் குரல்கள், வீணைகானம் போல மதிக்கப்பட்டது மக்களால்.

மதிக்கப்பட்டதோடன்றி, அதை காரிய சித்தியாக்கவும் ஒவ்வொருவரும் முனைந்தனர்.

காரணம், பொதுஜனத் தலைவர்கள், எழுப்பிய முழக்கங்கள், உண்மை உணர்ச்சியைத் தட்டி எழுப்பின.

அவர்கள் குரல்களிலே, நம்பிக்கை ஒளியைக் கண்டனர். புது நாதமாக ஒலித்தது, அவர்கள் பேச்சுக்கள்.

"தலைவர்கள் சொல்கிறார்கள்!"—இந்தக் காரணமல்ல, மக்களைத் தியாகத் தீயில் குதிக்கச் செய்தது.

"தலைவர்கள் கூறுவதிலும் உண்மையிருக்கிறது. நாம், வேதனையைத்தான் அனுபவிக்கிறோம் — அன்னியன் ஆட்சியில்" என்பது, மக்கள் மனதிலெல்லாம், படர்ந்து கிடந்தது.

படர்ந்த தீயை, பன்மடங்காக விரியச் செய்தது, தலைவர்களின் குரல்.

வெற்றியும் கண்டது, நாடு. தலைவர்களின் மீது பாசமும் பக்தியும் அதிகரித்தது, மக்களுக்கு. அவர்கள் பேச்சுக்களிலே முன்னைவிட நம்பிக்கையும் நல்லெண்ணமும் அதிகமாயிற்று.

"சுதந்திரம் பெற்று விட்டோம்—அதற்குத் தூண்டுகோலாயிருந்தோர், நம் தலைவர்கள். அவர்கள் நம் நாட்டைப் பொன்னுடாக்குவார்கள்" என்று நம்பினர்.

அந்த நம்பிக்கையால், தலைவர்கள் சொன்னபடியெல்லாம் நடந்தனர்.

தலைவர்கள் சொல்லே சட்டம்! அவர்களின் செயல் ஒவ்வொன்றும் அப்பழுக்கற்றது! — என்று, கபடமில்லா மனதோடு கருதினர்.

நெபோலியன், வீரர்களை வருக வென போருக்கழைத்த போது, பிரெஞ்சு வீரர்கள் ஏழ்மையையும் மறந்து போர்க்களம் நோக்கி[illegible] ணம், அவர்களுக்கு நெப்போலி[illegible] மீதிருந்த நம்பிக்கை தான்.

அதே போன்ற நம்பிக்கை[illegible] இந்தியத் தலைவர்களும் மக்கள்[illegible] பெற்றிருந்த காரணத்தால், த[illegible] இஷ்டம் போல் நடைபோட[illegible] தது.

"காஷ்மீரப் போர்!"—என்[illegible] சரி என்றது நாடு.

"அகதிகள் தொல்லை!" —[illegible] படிக் கூறினர்; ஒப்பினர் மக்கள்[illegible]

"வரி அதிகம் வேண்டும்—[illegible] வைச் சமாளிக்க!" — என்று [illegible] னர். 'அப்படியா?' என்றன[illegible] தவிர மறுக்கவில்லை.

"பணமில்லை—வேண்டிய நன்[illegible] களைச் செய்ய"—இது, ஒரு சம[illegible]

"ஆறவுன்சுதான் தர முடியு[illegible] இப்படி, வேறொரு நேரம்.

பலப்பல முறைகளில், ஆட்சி[illegible] அமர்ந்தோரின் சஞ்சலக் குரல்[illegible] எழும்பின.

முதலில், மக்கள் அப்படியே[illegible] பினர்.

கொடுமையும் ஏழ்மையும் சில[illegible] ளில் மறையும் என்று கருதின[illegible] தலைவர்கள்மீதிருந்த எடை [illegible] யாததால்.

நாட்கள், ஆண்டுகளாகின. கு[illegible] கள் பெருகினவே தவிர, கு[illegible] வில்லை.

கேள்விக்குறி எழும்பிற்று, [illegible] டோர் இதயத்தில்.

பிறகு, கேள்வி, அதிருப்தி[illegible] வளர்ந்து, இப்போது ஆத்திர[illegible] உருமாறியிருக்கிறது.

உரிமையாளர்,
எம். எஸ். சிவசாமி
பிரதர்.
தூத்துக்குடி.

ாதுஜனத் தலைவர்கள் என் க்கப்பட்டோர் மீது முன் த நம்பிக்கை ஒளி, மங்கிவிட்

ர்பார்த்ததுபோலல்லாமல்,ஆள ரான அவர்கள் தாறுமாருக பதும் தறுதலைத்தனம் செய் ம் காணக்காண, 'சீச்சி!' என்று வலமாக நினைக்குமளவுக்கு. மை மாறியிருக்கிறது.

க்கள் மன்றத்தில் மட்டும்தான் றல்ல, வலிவும் பலமும் ருந்திய இயந்திரம் என்று கரு ட்ட காங்கிரஸ் கட்சியிலேயே, வர்கள்மீது தொண்டர்களுக்கு ருப்தி வளர்ந்து; அனல் வீசச் ய ஆரம்பித்திருக்கிறது.

பாற்றிப் புகழ்ந்த பத்திரிகைகள் ளா, ஒரு சமயம் போதனை புரி ம், மற்றொரு நேரம் வேதனை டு கண்டிக்கவுமாக, எழுதத் ப்பட்டுவிட்டன.

கடன்—கேலிச் சித்திரங்கள், டுகிறது, இவர்கள் ஆட்சி த்து.

த்திரன்—காரசாரமாக இல்லா டாலும் கண்டிக்கத் தவறுவ லை, சீர்கேடுகள்பற்றி.

தினமணி — ஊழல்களை, பேனு ல் வெளிப்படுத்துகிறது — எப் ாதாவது.

தினசரி—தினசரி, கேலியும் கண் னமும் ஒலிக்க,எழுதிக்கொண்டே ருக்கிறது.

கல்கி — அறிவுரையும் ஆலோ னகளுமாக எழுதத் தவறுவ லை, அடிக்கடி.

காண்டீபம்—கேட்கவேண்டாம்! ருக்குத் தெரியாத அமைச்சர் ரின் அன்றாட ஊழல்களை அள் க் கொட்டுகிறது.

பத்திரிகைகள் எழுதுகின்றன— லை! இல்லை!! குண்டுமாரிகளைப் ாழிகின்றன!

தொண்டர்களோ, நாலுபேர் சந் க்கும்போதும், கமிட்டிக் கூட்டங் ிலும், தங்கள் மனப்புயலை ழப்புகிறார்கள்.

அதுமட்டுமல்ல, தாங்கள் போற் அதே தலைவர்களை எதிர்க்கிறார் ர.

ஆமாம்! எதிர்க்கிறார்கள்!!

அந்த அளவுக்கு, தலைவர்கள்மீ திருந்த நம்பிக்கை இடிந்துபோய் விட்டது.

இடிந்துபோகுமளவுக்கு, காங்கி ரஸ் பிரமுகர்களின் நடத்தைகள் கேவலமாகிவிட்டன.

கேவலம் என்றால் அல்ப சோல்ப மல்ல! இதோ, இரண்டொரு சான்றுகள்!!

* சென்னை மந்திரியார் சென்னையில் ஒரு ஓட்டலைத் திறந்து வைத்தார். சில மாதங்களுக்கெல்லாம் அந்த ஓட்டல் 'விபசார விடுதி' யாக மாறியதாம்.
* அதோடு, கள்ளத்தனமாகக் கொண்டுவரப்படும் தங்கம் வெள்ளி முதலிய பொருள்கள் காக்கப்படும் இடமாகவும் ஆயிற்றாம்.
* சென்னை அமைச்சர் ஒருவரின் வீட்டில் வேலை பார்க்கும் இருவர், சாராயம் குடித்திருந்தபோது போலீசார் கைது செய்தனர்.

எவ்வளவு கேவலம்! எத்துணை ஆபாசம்!! இதுபோல, அருவருக்கத்தக்க பாதைகளிலே, அமைச்சர்களாய் அமர்ந்தோரைச் சுற்றி வாழ்க்கை அமைந்துவிட்டது. அதையொட்டி, அவர்களும் வாழத் துவங்கிவிட்டனர். சென்னை மாநில அமைச்சர்களைப்பற்றி ஆராயப் புகுந்தால், 'தினசரி' கூறுகிறபடி. ஒருவர் எங்கெங்கே நடனராணிகளின் விழாக்களென்று செல்கிறார்! இன்னொருவர் எந்தெந்த வகைகளில் தனக்கான நலனைத் தேடிக் கொள்ளலாம் என்று பாடுபடுகிறார்! வேறொரு அமைச்சர் சினிமா நிலையங்கள், படக் காட்சிச் சாலைகளில் அதிக கவனம் செலுத்துகிறார்!!

ஆட்சியின் முக்கியத்துவம்பற்றி அறியத் தவறினர், அலங்கோலப் போக்கில் ஆடத் துவங்கினர்.

ஆகவே, பொதுமக்கள் அவர்கள் மீதுகொண்டிருந்த நம்பிக்கை நாசமாகிவிட்டது; சிதைந்துவிட்டது. ஏச்சும் பேச்சும், நிறைந்துவிட்டன.

இந்த உண்மையை, பொதுத் தேர்தல் நெருங்குவதால், உணரத் தலைப்பட்டிருக்கின்றனர்போலும்!

சிலகாலமாக எங்கு சென்றாலும் நமது மதியூக மந்திரிகள், பிலாக்கணம் பாடத் துவங்கியிருக்கிறார்கள்.

"பொதுமக்களே! எவ்வளவோ கஷ்டப்படுகிறீர்கள். உங்கள் சங்கடங்களை சர்க்கார் அறியாமலில்லை. ஆனால் என் செய்வது? அவைகளைப் போக்க வேண்டுமென்றும் தான் விரும்புகிறோம். முடியவில்லை! பொருளாதாரக் கஷ்டம், புண்ணின் மேல் வேலாகப்பாய்கிறது. கோபப்படாதீர்கள்! எங்கள் மேல் அனுதாபங்காட்டுங்கள்" என்று ஆரம்பித்து, நெபோலியன் போருக்கழைத்தது போல, "பொதுத்தேர்தலில் காங்கிரசுக்கே ஓட்போடுங்கள்! எங்களையேதேர்ந்தெடுங்கள்!!" என்று வேண்டுகோள் விடுத்து, 'இந்தியமக்கள் செய்தநன்றி மறக்காதவர்கள் என்பதை உலகம் அறியும். ஆகவே, அதிகமாகவாசொல்லவேண்டும்?" என்று பிரெஞ்சு மாவீரன் பாணியிலேயேமுடிக்கின்றனர்.

கடந்த 7ந் தேதியன்று, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேசிய நமது நிதியமைச்சர் கூறினாராம் 'சர்க்கார் இதுவரை செய்துள்ளவைகள் பற்றி அனுதாபத்துடன் பாராட்ட வேண்டும்' என்பதாக.

தேர்தல் நெருங்க இத் திருவடி

சர்வாதிகாரம்! என் உரிமை...
சாகஸத்தனம்! என் கொள்கை...
சுயநலப் பிரியம்! என் நம்பிக்கை...
இம்மூவரையும் சந்திக்கும்

கதை, வசனம்:
சி. எஸ். அறிவழகன்
மூவர்ண மேலட்டை :: 86 பக்கங்கள்
விலை அணு 12 கழிவு 25o/o
சந்திரா பதிப்பகம்
(A.) ஸ்ரீரங்கம். P. O.

பணியும் கட்டம், அரும்ப ஆரம்பித்திருக்கிறது!

ஆனால், பாபம், மக்கள் இவர்கள் கூறுவதை நம்புமளவு செவிடாகவுமில்லை; கருத்துக் குருடராகவுமில்லை!

முன்பாகஇருந்திருந்தால்,எதைச் சொல்லினும் ஒப்புவர்! நெபோலியன் அழைப்பு கேட்டதும் வீராவேசங் கொண்டோர் போலப் புறப்படுவர்!

இப்போதுதான், நம்பிக்கையே இல்லையே காங்கிரசின் மேல்!

ஆசை, அமைச்சர்களை தந்திரோபாயங்களையெல்லாம் செய்யத் தூண்டுகிறது, போலும்.

இதுவரை, ஆர்ப்பரித்தது எவ்வளவு! ஆட்சி முறையின் ஊழல்களைச் சொன்னால் ஆட்களை ஏவிவிட்டு அடிக்கச் சொன்ன நிகழ்ச்சிகள் எத்தனை!யெத்தனை! துப்பாக்கித் துரைத்தனம் செய்த காட்சிகள்! 'நடுக்கடக்குவோம்' என்று துள்ளிக் குதித்த சந்தர்ப்பங்களை, அவர்கள் மறந்தாலும், நாடு மறக்க முடியுமா? 'இதைச் செய்யுங்கள்—அதைச் செய்யத்; தவறுதீர்கள், என்று ஆலோசனை கூறச்சென்றவர்களிடம் காட்டிய அலட்சிய மனோபாவம்! அடங்காப் பிடாரித்தனம்! அட்டகாச ஆர் பாட்டம்!!

இத்தனையையும் மறந்து விட்டு, அனுதாபம் காட்ட வேண்டுமாம்—பொதுமக்கள்.

நம்பிக்கை இழந்து விட்டனர், மக்கள் என்றதும் 'திருவடி துணை—எனைக்காப்பீர் நீவிர்' என்று, கானமெழுப்பும் கலாதரர்களாக மாறத் துவங்குகின்றனர்.

"ஐயோ! அத்தான். ஆசைஉண்டு எனக்கு, அவர்மீது. அதனால், நான் தவறாக நடந்திருக்கலாம். ஆசாபாசங்கள் மனிதருக்கு இயற்கை தானே. மறந்து என்னை மன்னியுங்கள்!'' என்று சோரம்போன, கள்ளி, சொந்தக் கணவனிடம் சொன்னால், மானமுள்ளவன் 'வருந்தாதே, மானே! போனது போகட்டும்!!" என்று, கூறுவான்! கொஞ்சம் ஆத்திரக்காரனாக இருந்தால், அவள், அன்று இரத்தத்தில் மிதப்பாள்! அல்லது, வீதிகளில் விரண்டோடச் செய்யப் படுவாள்!

ஆனால், நமது அமைச்சர்களோ, 'சோரம் போயிருக்கலாம் — ஆனாலும் அனுதாபம் காட்டுங்கள்!' என்று பேச வெட்கப்படவில்லை.

"தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் அனுதாபம் காட்டுங்கள்'' இதே பாணியில் பேசத் தலைப்படுகின்றனர்.

அனுதாபம் காட்டவேண்டுமாம்! துணிந்து, பேசுகிறார்கள்.

'ஆசை வெட்கம் அறியாது!' என்பார்கள்.

அந்தக் கட்டத்துக்கு வந்துள்ளனர், காங்கிரஸ் பீடத்தினர். அதனால்தான்,

"திருவடி சரணம்! தீனாட்சகா!'' என்று பாடத் துவங்கியிருக்கிறார்கள்.

அதற்குப்பல்லவியாக, "நாம் எல்லாம் இந்திய மக்களல்லவா?" ...றும்,

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்... என்ற ஐக்கியவாசகத்தை மற்... நேரத்திலும், "எங்களை ஆ... தவர்களாயிற்றே நீங்கள் — ... ளுக்கோ சொல்லவேண்டு... என்று இன்னொரு சமயத்திலு...

இப்படி விதவிதமான 'நா... நர்த்தனங்களைச் செய்துவிட்டு ... போது, "திருவடி சரணம்—எம்... திருவருள் கூர்வீர்!'' என்று, பு... படத் துவங்கியுள்ளனர்.

ஆனால், நல்ல வேளை! அதை... பும் நிலையில் மக்களுமில்லை—நா... இல்லை!!

இதுவா சுதந்திரம்?

காங்கிரஸ்காரர்கள், சுதந்திரம் என்று பெயர் சொல்லி ஆட்சிபீடத்தமர்ந்து ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டன.

வெள்ளையன் காலத்தில் நடக்காத அளவு. விந்தையும் விபரீதமும் கலந்த வேதனைப் பாணங்கள் வீசப்பட்டிருக்கின்றன.

பொதுக்கூட்டம் போடவேண்டுமென்றால், முதலில் போலீஸ் அனுமதியைப் பெறவேண்டும்.

ஒலி பெருக்கி வைக்கவும், அவர்களது உத்திரவையே பெறவேண்டும். ஊர்வலமா? அதற்கும் 'அனுமதி' அவசியம்.

ஒவ்வொரு ஊர்களிலும் இத்தடை!

ஒருமுறை அல்ல, பத்துமுறை அல்ல, தொடர்ந்து போட்டுக் கொண்டே உள்ளனர்.

இந்த வெட்கக்கேடு நீளுவதை இந்நாட்டிலன்றி வேறெங்கும் காண முடியாது.

வெள்ளையன் காலத்தில் இது போன்ற அக்கிரம நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றது இல்லை.

ஆனால், இவர்களாட்சிப் பீடம் ஏறின நாள்முதல் இன்றுவரை இந்த அலங்கோலமே நடைபெற்று வருகிறது — விட்டு விட்டுக்கூட அல்ல; தொடர்ச்சியாக.

இந்த நிலையில், பொதுத்தேர்தல் ஒன்று வரப் போகிறது. எப்படித்தான் பேச்சுரிமை கிடைக்கப்போ... றதோ எதிர்க்கட்சிக்காரர்களுக்கு...

* * *

இந்த அக்கிரமம் தொடர்... நடைபெறுவதுமல்ல; நமது கழ... தோழர்கள் கூட்டம் நடத்த முய... றால், பல ஊர்களில் அவர்களு... அனுமதியும் மறுக்கப்படுகிறதாம்...

144 வீசி, நமது கழகக் கூட்ட... கள் நடைபெறாமல், காங்கிரஸ் ஆ... வந்தார் தந்திரோபாயங்களை வீசி... வருகின்றனர்.

கடந்த ஒரு வாரத்தில்மட்டு... மதுரை மாவட்டத்தைச் சேர்... சித்தையன்கோட்டை, சின்னா... பட்டி, நாங்குனேரி தென்தாமரை... குளம் ஆகிய ஊர்களில் நமது கூ... டங்கள் நடத்த அனுமதி மறுத்... ருக்கின்றனர்.

இந்த அக்கிரமத்தை அடக்க... மனித உரிமையை நிலைநாட்ட... நமது கழகம் செய்திருக்கு... முடிவையொட்டி நமது கழக மு... னணி வீரர்கள், அறப்போரில்... பட்டிருக்கிறார்கள்.

இதற்கான அறப்போரில் ஈடுப... டதுமுதல் நம்மைத் துப்பாக்... குண்டுகளால் பதம் பார்த்தன... தடியடி தர்பார் நடத்தினர்!

ஜனநாயகத்தை சமாதிக்கு... பும் இந்த அக்கிரமத்தை ஒழி... நாம் நம் கடமையைச் செய்தோ... இனியும் செய்வோம். —

...பலே, ஆள்!

★

...ச்சாரியார் இருக்கிறாரே, அவர் ...' அலாதி மனுஷர்! காங்கிரஸ் ...க்கியர் என்று அவருக்கோர் ...மளித்தது மிக மிகப் பொருத்... குழந்தையும் கிள்ளிவிட்டுத் ...ட்டிலேயும் ஆட்டிவிட்டு, 'ஆரா...' பாடி தன் குழந்தை தன் ...த்தால்தான் தூங்கிற்று என்று ...த்துக் கொள்வதில் அவருக்கு ... அவரேதான்!

...ண்மையில் சண்டமாருதமென ...திய காங்கிரசில் குழப்பம் ஏற்...ட்டது. தாண்டன் விலகவும், ...ரு தலைமைப் பீடம் ஏற்கவுமான ...பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ...த நிகழ்ச்சிகள் பற்றி, பல தலை...கள் பெயரும், அவர்தம் முயற்சி... குறித்தும் பரபரப்பான ...லப்புகளோடு பத்திரிகைகள் ...பல்பப் படுத்தின. ஆனால் 'நம்ம...' பெயரோ, எதிலும் காணப்பட...லை! இந்தச் சம்பவங்களுக்கும் ...க்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ...ன்றிருக்கிறாரோ என்று கூடப் ...லர் எண்ணினர். அவ்வளவு ...ரம், பேசாது, வாய் திறவாது ...ருந்தார்!

ஆனால் அத்தகைய ஆசாமி ஒரு ...று குறும்பு மூலம் தனது எண...ங்களைக் காட்டிக் கொண்டிருக்...றார்—செப்டம்பர் 9ந் தேதி.

நேரு, தன்னைத் தலைவராகத் ...தர்ந்தெடுத்தது பற்றியும், இனி ...செய்யவேண்டிய காரியங்கள் குறித்...ம், காரசாரமாகப் பேசிக்கொண்...ருந்திருக்கிறார்.

ஆனால் அப்போது 'நம்மவர்' ...ன்ன செய்தார் தெரியுமோ?

அருகில் அமர்ந்திருந்த தாண்ட...னுடைய கையைப் பிடித்து, ரேகை ...ாஸ்திரம் பார்த்து, தாண்ட...னுடைய எதிர்காலம் பற்றி ஜாதகம் ...ார்த்துக் கொண்டிருந்தாராம்! ...ந்த வேடிக்கையை மிக சுவாரஸ்ய...ாக இந்திய சட்ட சபை கொறடா...ான சத்யநாராயண சின்ஹா என்ப...ரும், அமைச்சர்களில் ஒருவரான ...ஆர். ஆர். திவாகரும் கவனித்துக் ...கொண்டிருந்தார்களாம். எவ்வளவு குறும்பு பாருங்கள்! முதல் நாள் தான் தமது தலைமைப் பதவியை ராஜினுமா செய்திருக்கிறார், தாண்டன். அவரது எதிர்காலம் பற்றி, என்ன ஆகுமோ, எப்படிக் காலந் தள்ளுவரோ, என்று கணிப்பதில் இவருக்கு அதிசிரத்தை ஏற்பட்டிருக்கிறது!!

ஆனால், அதே கூட்டத்தில், ஜோசியம் பார்ப்பது குறித்து, கண்டித்து நேரு கர்ஜனை செய்திருக்கிறார். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே வரும் செப்டம்பரில் போர் மூளும் என்று டில்லி பத்திரிகையொன்று 'கிரக சாஸ்திரம்' வெளியிட்டிருந்ததாம். 'இந்தப் புரட்டுகளை நம்புமளவு நமது நாட்டில் முட்டாள்களும் இருக்கிறார்கள்' என்று, புயல்போலப் பேசியிருக்கிறார், பிரதமர். அதோடு, "இதுபோன்ற குருட்டு நம்பிக்கைகளால்தானு நம் தலைவிதியை நாம் நிர்ணயித்துக்கொள்கிறோம். முட்டாள்கள் சொல்வதை நம்பி, அவைகளுக்காக நாம் அடிமையாகக் கிடக்கப்போகிறோமா?" என்று ஆவேசத்தோடு கேட்டிருக்கிறார். 'ஜோசியம் பார்த்துச் சொல்வதாகவோ அல்லது பார்த்து நம்புவதாகவோ இருக்கும் முறையை அறவே ஒழிக்க என்னைப் பொறுத்தவரையில் மிக மிக கடினமான சட்டம் இருக்கவேண்டுமென்றே கருதுகிறேன்" என்று ஆக்ரோஷத்தோடு பேசியிருக்கிறார்.

ஜோசியத்தைக் கண்டித்து பிரதமர், ஆவேசமாகப் பேசியிருக்கிறார்.

அதே நேரத்தில், அதே இடத்தில் ஆச்சாரியார், தாண்டனுடைய கை ரேகையில் கவனம் செலுத்தியிருக்கிறார்.

இரண்டு செய்திகளையும் ரசமான நிகழ்ச்சி என்று குறிப்பிட்டு பி. டி. ஐ. செய்தி ஸ்தாபனம் தந்திருக்கிறது.

தனது சகாவைத் தலைவராக்கிவிட்டு எதிரியின் கைரேகை பார்க்கிறார்—சி. ஆர். அவ்வளவு எக்களிப்புபோலும்!

ஆனால்; நேருவோ, ஜோசிய முறையை கண்டித்துப் பேசியிருக்கிறார்.

இருவருமோ, நண்பர்கள். ஆனால் இத்திருக்கூத்து! அதுவும் காரியக் கமிட்டி கூட்டத்தில்! இதன் பொருளை எவரே புரிய முடியும், 'எல்லாம் வல்ல' குல்லூக பட்டரைத்தவிர்த்து!!

★

தி. மு. க. இரண்டாம் ஆண்டு மலர்

23-9-51-ல் உங்கள் கரங்களில் தவழும்.

★

கழகக் கொடியில் தொங்கும் டாலரில், நமது திராவிடநாடு முகப்பாக இருந்து மகிழ்விக்கும்.

★

கழகத்தின் இவ்வாண்டு நடவடிக்கைகளை தொகுத்துக் காட்டும் கழகக் காலண்டர்.

★

சி. என். ஏ.
கா. அப்பாதுரை
கைவல்யம்
எஸ். வேதரத்தினம் எம். ஏ.,
நெடுஞ்செழியன் எம். ஏ.,
மதியழகன் பி. ஏ.,
வாணன், வாணிதாசன்
இராதாமணாளன்
என். வி. நடராசன்.
அன்பழகன் எம். ஏ.
மற்றும் பலர் எழுதியுள்ளனர்.

★

கதை, கட்டுரை, கவிதை, நாடகம் ஆகிய இதழ்களாலாக்கப்பட்டுள்ளது மலர்.

★

விலை எட்டணு.

திராவிடநாடு

ஞாயிறு] 16—9—51 [காஞ்சி

பழைய அகராதி

★

பட்டம்! பதவிகள்! பாராண்டவர்களுக்கு, பரங்கிகள் தருவதா? இதனை ஒப்புவதா? பட்டங்களை அவர்கள் தருவதாம்! பாரத மாதாவின் வீரப் புதல்வர்கள் ஏற்பதாம்! என்ன வெட்கக் கேடு! சர்ராம், புர்ராம்! திவானும், பகதூராம், ராவ்பகதூராம் பகல் பகதூராம்! தருகிறார்களாம், அந்த அந்நியர்கள்! அதனை ஆண்ட மரபினர் பல்லோராம் தெரியக் காட்டி வாங்குவதாம்! இதைவிட தூக்கிலே தொங்கலாமே! தேசத்தை சேதப்படுத்தவே இந்த நாட்டிலிருக்கும் அந்த வெள்ளை வெறியர்களிடம் பட்டங்கள்பெற்றுக் கொண்டு சில மாமிசப் பிண்டங்கள் உலவுகின்றனவே! அவைகளை எண்ணும்பொழுதுதான் ஆத்திரமும் வருகிறது! அனுதாபமும் பிறக்கிறது! பட்டத்தைக் காட்டி, நம்மை மடக்கப் பார்க்கிறார்கள்! பதவிகளை நீட்டி, நம்மை மட்டந்தட்டுகிறார்கள்! பட்டங்களை வீசியெறியுங்கள்! பரங்கியரை விரட்டியடியுங்கள்!

* * *

இது பழைய ரிகார்டு — ஆகவே, இன்று மெல்லியதாகத்தான் செவிகளில் படும்.

ஆனால், அன்று, காங்கிரஸ் பிரசாரக பெருவாயர்கள் இந்தப் பிரசங்கம் செய்தபொழுது, கேட்டவர் காது செவிடாகி யிருக்கும்! அவர்கள் காட்டிய வீராவேசத் தோற்றம், காண்போர் கண்களிலே ஒளியேற்றியிருக்கும்!

அப்படிப் பேசினார்கள்! பட்டந் தருந் திட்டத்தை எதிர்த்து புயல்போல் சுற்றி, நீர் வீழ்ச்சிபோல் பொழிந்து, அனல் மலையைப்போல, அக்கினியை வாரியிறைத்தார்கள்.

சர் பட்டம், நம்மைக் கடித்திடும் சர்ப்பம்.

பகதூர்—நம்மை பாழாக்கிடும் விஷம்.

ராவ் பகதூர்—நம்மை மாத்திலே ஊஞ்சலாட்டிடும் தூக்குக் கயிறு.

இப்படி, பட்டங்களுக்கு அர்த்தங்கள் தந்தனர்! பழைய அகராதியை, இன்று புரட்டிடுவோருக்கு இது நன்றாகத் தெரியும்!

வெள்ளையர் ஆண்ட நேரத்தில், ஆண்டுதோறும், இம்மாதிரி பட்டங்கள் வழங்குவது வழக்கம். அதனைத்தான் கண்டித்தனர்.

அம்மாதிரி பட்டங்களை உதறியவர்களை, தேசத்தியாகிகள் என்று புகழ்ந்தனர்.

அப்பட்டங்களை கேலி பேசியோரே, தேசபக்தர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டனர்.

அப்பட்டங்களைப் பெற்றோரைத் தாக்கிப் பேசுவோருக்கு, கோடையிடி, குத்துவெட்டு, தீப்பொறி, என்றெல்லாம் புதிய பட்டங்களை ஒட்டிவிட்டனர்.

தேசசேவையே, இம்மாதிரி பட்டம் பெற்றவர்களைத் திட்டிடுவதும், தூற்றுவதுமே என்று எண்ணினர்.

காங்கிரஸ்காரர்களின் பழைய அகராதி இன்று மூடி, மூலையிலே தூங்குகிறது! அதனால் தான் அவர்கள் இன்று நாக்கைச் சுழற்றுகிறார்கள்; கண்ட திசைகளிலும்! ஆனால் மக்கள் கவனம் மாறவில்லையே, இன்னமும்!

* * *

பட்டம், பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறிட அல்ல இவைகளைக் கூறுவது!

நாம், தாய்க்கழகத்திலே இருந்து, தளராது பணியாற்றி வந்த நேரத்தில் 'சேலம்' நடந்தது! அந்த 'சேலம்' செய்த சேவையால் தான் மக்கள் மன்றத்திலே, மகத்தான சக்தியாக நாம் வளர முடிந்தது!

சேலம் செயலாற்றிய காலத்திற்கு முன்பே, காங்கிரஸ் ஓலம்கேட்டது. ஆனால், அந்த ஓலமெழுப்பிய சிலர்கள் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? அதுதான்வேதனையான வேடிக்கை!

இப்பொழுது, மீண்டும் அந்த மரியாதைப் பட்டங்கள் பதவிகள் தரும் முறையைக் கொண்டு வரப் போகிறார்களாம்! இப்படி டெல்லி தகவல் தந்திருக்கிறது!

பட்டம், பதவிகளைக் காட்டி, நம் நாட்டுப் பணம் படைத்தோரை தம் சிலந்திக் கூட்டுக்குள் இழு
கொள்கிறார்கள், வெள்ளைய
என்பதே அன்றைய குற்றச்சா

ஆனால், இன்று, இவர்கள்
டுங் காரணத்தைப் பார்த்தால்,
களின் பழைய அகராதியைப்
கவனமே துளியும் இல்லை போ
என்றே கூறத் தோன்றுகிறது.

பழைய அகராதியில் உள்ள
நாம் மறக்கவில்லை, நாட்டே
மறக்கவில்லை! ஆனால் அவ
மறந்து விட்டார்களா, மறைக்
களா என்பதே புரியவில்லை!

பணம் படைத்தோர்கள், பொ
நலக் காரியங்களுக்கு நன்கொ
வழங்க வேண்டினால் இப்பொ
மறுக்கிறார்களாம்! அவர்கள்
ளக் கருணைக் கதவைத் திறக்க,
தப் பட்டம் என்ற சாவி வே
மாம்!

இவர்கள், பணம் படைத்தோ
இரும்பு இதயத்தைத் திறக்க தி
கோல் என்கிறார்கள்! அவ
அதையே, தங்கள் இருப்புப் பெ
டியை நிறைக்கவும், அதற்கா
கையாளும் முறை கெட்ட போக்
மறைக்க உதவும் திரை எனக்கரு
கிறார்கள்!

பட்டந் தருவார்களாம் இவர்க
பொதுக் காரியத்திற்கு, அவர்
பணந்தருவார்களாம்!

பொதுப் பணிக்காக, எவ்வ
அற்புதமான நிதி சேர்ப்புமுறை

இவர்கள் தூற்றிய திட்டத்
புகுத்துகிறார்கள்! போற்றுகிற
கள்! ஆனால், நாட்டோர் பழை
அகராதியைப் புரட்டிப் பார்க்கிற
கள். சிரிக்கிறார்கள்!

அந்நியகால அலங்கோலத்தி
இதுவுமொன்று என்று அவர்
நினைக்கிறார்கள்! ஆளவந்த காங்
சார் மட்டும், தங்கள் பழைய அ
ராதியைக் கொஞ்சம் கவனத்தி
வைத்துக் காரியமாற்றவேண்டும்

பட்டம் பதவிகளை, அவர்
திட்டிய திட்டுகள் இன்னமும் எ
ரொலிக்கின்றன. அவைகளை க
னிக்காமல், கண்டபடி பேசின
செய்தால், இரட்டை நாக்கின
என்ற பட்டமே, மிஞ்சும் அவ
களுக்கு! ஆட்சி போகும், அல
கோலம் தழுவும்! அந்த அழி
பட்டம் மட்டும் அழியா
இருக்கும்!

★

★ கேவலமான செயல்! ★

★

“சேச்சே! அவனா?”

“போசமான ஆளாச்சே!”

“தறுதலையல்லவோ!”

“அடங்காப்பிடாரி! திமிர் பிடித்தவன்!!”

* * *

நல்லவனையும், கெட்டவனாக்கிவிடுவர், இதுபோன்ற வேகமான வார்த்தைகளை வீசி, தமக்குப் பிடிக்காத ஒருவனை, பலர் மத்தியில், இவ்வித வசைமொழிகளால் தாக்கி, ‘அவனா? பெரிய போக்கிரி’ என்று மற்றோரும் கருதும்படியான சூழ்நிலையை ஏற்படுத்திவிடுவர். அதிலும், இந்தக் குற்றச்சாட்டுகளை வீசும் நபர், கொஞ்சம் செல்வாக்கும் ஆளம்பும் நிரம்பியவராக இருந்துவிட்டால் கேட்க வேண்டாம்! வெகு எளிதில், துஷ் பிரச்சாரம் பரவும். தூற்றப்பட்ட அந்த நபர், எங்கு சென்றாலும், ‘தூ! தூ!!’ என்ற ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாவான்.

இந்த சூட்சுமமான திருப்பணி, இத்துரதிர்ஷ்ட நாட்டில் வெகு காலமாக நடைபெற்று வருவதாகும்—பொதுவாழ்வுத் துறையில்.

தன்மதிப்பியக்கம் துவங்கிய காலத்தில், சுயமரியாதைக்காரர்களைப்பற்றி, நாக்கும் வாக்கும் அசைந்தால் காரியங்களைச் சாதிக்கும் வல்லமை படைத்த ஆதிக்கக்காரர்கள், இந்த சூட்சமத்தையே கையாண்டார்கள்.

“நாஸ்திகனாச்சே அவன்!”

“கடவுள் இல்லையென்று சொல்கிறான்!”

இத்தகைய பொய்ப் பிரச்சாரத்தை, மூட நம்பிக்கையால் தங்கள் வாழ்வை வளமாக்கிக்கொள்ளும் வசதி படைத்தோர், செய்தார்கள்—பத்திரிகைகள் மூலமும் பிரச்சார பீரங்கிகள்மூலமும், சமுதாயத்தில், ‘இத்திருக்கூட்டத்தின்’ வாக்கு பலமுள்ளதாக இருக்கும் காரணத்தால், இத்தூற்றலைத் தாண்டி, நாம் யாரென்பதை உணர்த்த நமக்கு பல காலம் பிடித்தது!

புரிகிறதோ இல்லையோ, அடிக்கடி பேசி, அந்த வார்த்தைகள் மூலம், தாங்கள் தூற்றும் நபர்மீது அதிருப்தியைப் பரவவிட்டு, அதன் மூலம் அவன் நடமாட முடியாத பயங்கர சூழ்நிலையை ஏற்படுத்திவிடுவர்—ஆதிக்கபுரியினர்.

“திராவிடர்” என்ற வார்த்தையைக் காட்டி, நாம் ஒரு தனி இனம், நமக்கென ஒரு தனி அகம் தேவை, அதுவே “திராவிடநாடு” என்று பேசத் தலைப்பட்டதும், இந்த ஆதிக்கபுரியினர், நம்மை வீழ்த்த ஏவிய கணைகள்.

“அவன் ஒரு பிராமணத் துவேஷி!”

“வகுப்புவாதி!”

“நாட்டுத் துரோகி”

முதலிய வார்த்தைகளாகும்.

இந்தப் பழியைத் துடைத்து, பாமர மக்களிடையே நாம் களங்கமற்றோர் என்று காட்டிக்கொள்ள, நாம் பட்ட பாடும், இன்னும் படும் பாடும் கொஞ்சநஞ்சமல்ல.

நல்ல கொள்கைகளுக்காக பலத்த போராட்டங்களுக்கிடையே பொதுப்பணி புரிவோரை, பண பலமும் செல்வாக்கு பலமும் மிக்க ஆதிக்கக்காரர்களின் தூற்றல் துந்துபி, படாதபாடு படுத்தி வைக்கிறது.

இந்த ஆதிக்கக்காரர்கள் தங்கள் குரலுக்குப் பக்கபலமாக ஆட்சியாளரையும் ஆக்கிச் செய்வர்.

ஆட்சியாளரும் அவர் தம் சொற்கேட்டு ஆடுவதால் ஏற்படும் விளைவுகள் அனந்தம். இந்நிலையில் ஆதிக்கக்காரரின் வேலையை அரசாங்கமே ஏற்றுக் கொண்டுவிட்டால்...! கேட்கவா, வேண்டும்?

‘தூற்றல் துந்துபி’ மூலம், பிற கட்சியினரை ஒழிக்கும் திருச்சேவை, காங்கிரஸ் அமைச்சர்களால், செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சி பற்றி கடந்த 8ந் தேதியன்று சென்னை உயர் நீதிமன்றத்தினர் ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கும் போது குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஆந்திர நாட்டில் கிருஷ்ணமாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தை யாரோ சிலர் தாக்கி, ஒருவரைக் கொன்றுவிட்டனர் என்பதே, தீர்ப்பளிக்கப்பட்ட வழக்காகும். கொலை செய்யப் பட்டவர், ஒரு காங்கிரஸ்காரராம்!

இந்தச் சம்பவம் சம்பந்தமாக பலரைக் கைது செய்து, அவர்கள் கம்யூனிஸ்டுகள்; ஆகவே அப்படிச் செய்தனர்’ என்று சர்க்கார்சாரில் வழக்காடப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதி மன்ற நீதிபதிகள் கைது செய்யப் பட்டோரை விடுதலை செய்து, தீர்ப்பளித்ததோடு, பின் வருமாறு குறிப் பிட்டிருக்கின்றனர்.

“தங்கள் எதிரிகளுக்குக் கம்யூனிஸ்டுகள் என்ற பட்டத்தைச் சூட்டி, அவர்களைத் தண்டனைக்குள்ளாக்க அயோக்கியர்களால்முடிகிறது என்பதை இவ்வழக்கு காட்டுகிறது. இத்தகையவர்கள் கூறும் புகார்களை அப்படியே நம்பாமல் நன்கு ஆராய வேண்டும்!!

திருட்டோ, கொலையோ, சட்ட வரம்பை மீறியசெயல்களோ—எதுவானாலும், அதில் ஈடுபட்டோர் எவராயினும் உடனே “கம்யூனிஸ்டு” என்று கூறப்படும் நிலை, இன்றைய ஆட்சியில் இருந்து வருகிறது.

பல சம்பவங்கள் குறிப்பாக ஆந்திரத்திலும் சிறப்பாக தெலிங்கானா பகுதியிலும் நடைபெற்று வருவதாகச் செய்திகள் மூலம் அறிகிறோம்.

“கொலை நடைபெற்றது”

“அப்படியா, அது கம்யூனிஸ்டு செயல்”

“கொள்ளையா?”

“இதற்கும் கம்யூனிஸ்டுகளே காரணம்”

“கிராமங்களில் கலவரமா?”

“இதற்கும் அவர்களே காரணம்”

இதுபோல, எந்தக் கெடுதல்கள் நடைபெற்றாலும், அதற்குக் கார

கருணாநிதி தரும் கலை விருந்து

தி. மு. கழக உதவி நிதிக்காக

1951—செப்டம்பர்

16	17	24
சங்கரநயினார் கோவில்	தூத்துக்குடி	திருச்சி

ஆகிய இடங்களில்

★ வாழ்முடியாதவர்கள் ★

இயக்க வீரர்கள்

மு. கருணாநிதி
அரங்கண்ணல்
சி. வி. எம். அண்ணாமலை
கே. டி. எஸ். மணி
ஆர். கே. மூர்த்தி
சே. கோ. பெருமாள்
எத்ராசு
சபாபதி
முருகேசன்

நடிக மணிகள்

சிவாஜி கணேசன்
எம். என். கிருஷ்ணன்
நம்பிராஜன்
மகாலிங்கம்
முத்துக்கூத்தன்
மணி

மற்றும் கே. ஆர். ஆர். குழுவினர்.

கதை, வசனம்: மு. கருணாநிதி

பொன்னான கற்பனை! புதுமைச் சித்திரம்! புறையோடிப்போன சமூகத்தின் புண்ணாற்றும் மாமருந்து, இது!

தித்திக்கும் தமிழோசை கேட்க வாரீர்!
தேன் பாயும் நல்லோடை காண வாரீர்!!

—புதுமலர்ச்சி நாடக மன்றம்

ணம் கம்யூனிஸ்டுகள் என்றே குறிக்கப்படுகின்றனர்.

அதுமட்டுமல்ல, இதுபோன்ற கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுபவன் யாராயிருந்தாலும், ரௌடியானாலும்—பக்காத்திருடனானாலும்—பகல்கொள்ளைக்காரனானாலும்—அவனுக்கெல்லாம் "கம்யூனிஸ்ட்" என்கிற முத்திரையைக் குத்துகின்றனர்.

இந்த சூட்சுமத்தை, பலகாலமாக இன்றைய ஆதிக்கக் கட்சியினர் அனுசரித்தே, நடந்து வருகின்றனர்.

காரணம் இதன் மூலம், மக்கள் மத்தியில் "கம்யூனிஸ்டு"கள் என்றால் பயங்கரமும் பீதியும் ஏற்பட வேண்டும் — அவர்கள் பெயரைக் கேட்டாலே நடுங்கும்படிச் செய்ய வேண்டும், அதனால் அவர்களை அரசியல் வாழ்விலிருந்து ஒழித்துவிட வேண்டும், என்பதுதான்.

* * *

இந்த தந்திரத்திட்டம், உயர்நீதி மன்ற வழக்கின் மூலம், எல்லோருக்கும் விளங்கி விட்டது. வேண்டுமென்றே வீண் புகார்கிளப்பி, அரசியல் கட்சிகளை ஒழிப்பதில், எவ்வளவு அக்கரை காட்டி வருகின்றனர், காங்கிரஸ் ஆதிக்கபுரியினர் என்பதும், தெளிவாகவிளக்குகிறது—உயர் நீதி மன்றத் தீர்ப்பு,

பொதுப் பணி புரிவோரை, பொறாமை காரணமாக, தமது தூற்றல் துந்துபி மூலம் ஒழிக்கமுயல்வது—கேவலமான செயல். நாகரீக வளர்ச்சிக்கு ஒப்பாத முறை.

தூற்றலினால், துளைத்துவிடமுடியும் என்று கருதுவது, அனுபவம் அணுவளவுமில்லாத 'அரசியல் அப்பாவிகளின்' தப்புக் கணக்கு! அந்த அப்பாவிகள் பட்டியலில் காங்கிரசார் தங்களைப் பதிவு செய்துகொள்கிறார்கள்.

இத்தகைய தவறான போக்கை அவர்கள் திருத்தாவிட்டால், எதிர்காலம் இருளாகும் என்று, நாம் கூறவும் வேண்டுமா?

இந்தப் பாதையில் நடக்கும் காங்கிரஸ் ஆதிக்கக்காரர்களை என்னவென்று சொல்வது!!

யாத்திரை

தொடர்கதை

5

உலகிற்கு

சுந்தரம்

ஏகாம்பரம் அவர்கள் வீட்டிலேயே லீலாவும், இராமனும் தங்கியிருந்தார்கள். காதலில் வெற்றி பெற்ற அவர்களைக் கண்குளிரப் பார்ப்பதிலே இந்த காதல் முறிவால் கணத்திற்குக் கணம் செத்து மடியும் சுந்தருக்கு திருப்தி.....லீலா இன்னும் சிறுமியாக இருந்தாலும் மகா கெட்டிக்காரி, ஆகவே என் உள்ளத்தை உள்ளபடியே புரிந்து கொண்டாள். அன்னை அடிக்கடி வந்து பார்ப்பாள். இராமனும் அப்படியே. சில சமயங்களில் இருவரும் வந்து என்னுடன் அரசியல் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் வாதாடுவார்கள். எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி அவர்களோடு உரையாடுவதில்.......பத்மாவிற்கும் என் தங்கையின் அறிவின் திறத்தைக் காண பேரின்பம்!

லீலா வந்தாள், அவளுடன் இன்னொரு பெண்ணும் வந்திருந்தாள்.

"இவள் என் பள்ளித் தோழி. பெயர் மங்கை..." லீலா அறிமுகம் செய்தாள்.

"மங்கையா?...? ..." என்றேன் வியப்போடு!

"ஆச்சரியம் வேண்டாம் அண்ணா, தங்களுக்குக் கடிதம் எழுதிய அதே அபாக்கியவதி மங்கை நானேதான்..." என்றாள் அந்தப் பெண் கொஞ்சமும் தயங்காமல்!!

"தினகரனை அறிவீர்களா...நீங்கள்..." லீலா கேட்டாள்.

"எங்கள் இயக்கத்து முன்னணி வீரர்களில் அவனும் ஒருவன்" என்றேன்.

"அவன் வீரனா......சோதாவா? ....." மங்கை கேலியோடு கேட்டாள்.

"மங்கை, ஆத்திரப்படாதே, நான் உன் கடிதத்தைப் பார்த்த பிறகு சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன். அதனை நடத்துவிக்க முயற்சி செய்கிறேன். நீ மறுக்கக் கூடாது."

"அண்ணா, தாங்கள் அளிக்கும் தீர்ப்பை நான் எதிர்த்து எதையும் செய்யமாட்டேன். என்னை நம்புங்கள்"

"அப்படியானால் இன்று போ, நாளை வா, தங்கையே!"

பிறகு கொஞ்ச நேரம் தனிமையில் கிடந்துழன்றேன். பத்மா வந்துவிட்டாள். அவள் அன்று இனிமையாகப் பாடி என் இதயத்தில் ஒரு இன்ப மழையே பொழிந்தாள்.

தில்லை-வில்லாளன்

சுகத்தை நாடி ஓடிடும் மனித சாதிக்கு நான் சொல்லப் போவது இதுவரை ஞானிகள், மோன நிலையடைந்த முக்தர்கள், சித்தர்கள் கூறியவைகள் போல வெறும் வார்த்தை ஜாலங்களல்ல, நடைமுறைக்கு ஏற்ற நல்ல பாடம்! சுகத்தைத் தேடு, ஏ மனித சாதியே, தேடு, விடாமல் தேடு, மேலும் மேலும் தேடு......ஆனால் அதற்காக இதயத்தை இரும்பாக்காதே! நடைமுறை நூற்றாண்டை காட்டுவிலங்குகளின் காலமாக்காதே! மனித விதிக்கே மாறான பாதையில் இறங்கி விடாதே. இரக்கம் இருக்கட்டும்... நேர்மை சாக வேண்டாம். நீதி மடியக் கூடாது...ஒழுக்கத்திற்கு ஒரு ஒழுங்கான வரையறை இருக்கச் செய்...இப்படித்தான் நான் சொல்வேன்.

சுகத்தைவிட்டுவிட்டு சோகத்தை இந்த உலகில் அனுபவித்து, 'அந்த' உலகில் போய் ஆனந்தத்தை நாடு என்று உபதேசம் கூறவில்லை.

என் சுக தேவதை பத்மா...... அவளையடைய நேர்மையான பாதையில் முயற்சி செய்தேன். முடியவில்லை. மூர்க்க முறைகள், குதர்க்க வாதங்கள், குறுக்கு பாதைகள் எனக்குத் தெரியாதன அல்ல. பத்மாவைத் தொடமுடியும்...அவளைத் துவள அடிக்க வழியுண்டு...இருந்தும் விட்டு விட்டேன். ஏன்? ஆத்மா, மனச் சாட்சி யென்ற ஆசிரியனிடம் பாடம் கேட்டவண்ணமே இருந்தது...இருக்கிறது!

அந்த 'வளர் பிறை' என் பக்கத்தில் இருக்கிறாள். தொட்டு ரசிக்கத் தெரியாததால் விட்டு விலகி நிற்கவில்லை. அவளே என்னை விரும்பி நெருங்கினாலும்கூடாதுஎன்கிறேன். ஆம், ஒழுங்கு வேண்டும். இல்லாவிட்டால் சமூகத்தின் சமுகமான அமைப்புக் குலைந்து விடும். சமூகத்தின் ஒவ்வொரு அணுவும் தன் பாதையிலே தவறாது நடக்க வேண்டும். இல்லா விட்டால் ஒழுக்கக் குழப்பம் ஏற்பட்டு எல்லாம் கெட்டுக் குட்டிச்சுவராகிவிடும்!

பத்மா என் தொழுகைக்கு உரியவள்—தோழமைக்கல்ல! அதுபோல் அவள் என்னை நினைக்கிறாளோ என்னவோ...!

விடிந்தது......

வெள்ளையாடையில் வந்து தரிசனம் தந்தாள். சேவித்தேன்! அவளிடம் ஒருவரம்கேட்டேன். அன்று பகல் முழுவதும் என் அறையினுள் நுழையக்கூடாது என்றேன். அவள் முகம் மாறியது. இருந்தாலும் அவள் என் வேண்டுகோளின்படி வெளியே சென்றாள். வானத்தை விட்டு நிலவு விலகியிருப்பதால் மறு வரவேற்பின் போது ஆர்வம் அதிகரிக்கிறதல்லவா?

அவளை ஏன் போகச் சொன்னேன்?

வேண்டுமென்று தான்......நான் ஒரு நாடகமாடத் திட்டமிட்டிருந்தேன். அதை அவள் பார்க்கவேண்டாம் என்ற எண்ணியே பத்மாவிடம் அந்த வரத்தைக் கேட்டேன். தேவி அருள் புரிந்தாள்!

நாடகம்... ஆம், வாழ்க்கை நாடகம் இது! நாடகமே உலகம், நாளை நடப்பதை யார் அறிவார்....என்று அந்த ஆண்டி எதையெண்ணிப் பாடினானோ... ஆனால் அன்று ஒரு நாடகத்தை நடத்தத் திட்டமிட்டேன். நடிகர்களுக்காக எதிர் பார்த்திருந்தேன்.

என் கட்டிலில் நான் எழுதும்

வலிவின்றி படுத்திருந்தேன். எதிரில் இரண்டு மூன்று நாற்காலிகள் அதிகம்...அதுதான் 'ஸ்டேஜ்'...மூன்று கோப்பை டீ, அன்றைய மேடைச் செலவு......நான் எதிர் பார்த்திருந்தேன கதாநாயகனை!

அவன் நுழைந்தான்.

"தினகரனு......வாப்பா, எப்பொழுது வந்தாய்?"

"என்ன......!"

"ஆச்சர்யப் படாதே......தந்தி கொடுத்தது நான் தான்!"

"ஏன்..."

"காரியமாகத்தான்!"

"மாநாட்டு ஏற்பாடுகளைப் பற்றிக் கலந்து பேசலாம் என்று எண்ணியிருந்தேன். உங்களுக்கு இந்த நிலையில் அதிக தொல்லை கொடுக்கக் கூடாது என்று தான் வரவில்லை. தந்தி கிடைத்ததும், ஓடோடி வருகிறேன்."

நான் சிரித்தேன். அவன் விழித்தான்.

"தினகர்......"

என் வாய் எதையும் சொல்லவில்லை, அதற்குமேல்!

"ஊருக்கு உபதேசியாகிடுவதை எப்பொழுதுமே எதிர்க்கிறவன் நான்...தெரியுமா உனக்கு..."

"ஆ...மா...ம்......"

"நான் சொல்லும் கருத்துகள் அடிவானத்தை எட்டித்தொடுவதானாலும், அவைகளை அடைய முயற்சிப்பேன்......அறிவாயா நீ..."

தினகரன் திக்கு முக்காடிப் போனான்.

"மக்கள் மன்றம் ஒரு உன்னத இலட்சியத்தை நாடிப் பிரயாணம் போகும் 'யாத்திரீகர்கள்' கூட்டம். அதில் இலட்சிய சித்தியிலே நம்பிக்கையுள்ள அசையா உள்ளம் படைத்தவர்கள் ஏராளம் உண்டு. அந்தப் புனித ஏற்பாட்டைத் தன் விளம்பரத்திற்கும், இலாபத்திற்கும் பயன்படுத்திடும் கயவர்கள் என்றுமே கண்டனத்திற்கு ஆளாவார்கள்!"

"ஐயோ......தாங்கள் பேசுவது எதுவுமே புரியவில்லையே!"

"புரியும்......" என்று உறுமினேன் நான். மங்கை அனுப்பியிருந்த காகிதங்களை எடுத்து வீசினேன். அவன் நன்றாகப் புரிந்துகொண்டான் நிலைமையை...அவன் அழவில்லை—அவ்வளவுதான்!

என் திட்டப்படி அப்பொழுது லீலாவும் மங்கையும் உள்ளே நுழைந்தார்கள். மங்கை அவனை எரித்திடுவதைப்போலப் பார்த்தாள்.

"தினகர்......" என்றேன் ஆத்திரமாக!

"எதையுங் கேட்டு என் உள்ளத்தைப் புண்ணுக்க வேண்டாம். எல்லாம் உண்மை. இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

"இவளை மணந்துகொள்ளவேண்டும்!" என் கட்டளை.

"முடியாது...இந்த 'பிட் நோட்டீஸ்' எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று கூவினாள் அவள்.

"மங்கை தவறுவது மனித இயல்பு. தவறிவிட்டான், இப்பொழுது திருந்திவிடுவான். என் சொல்லைத் தட்டாதே. அவனை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. எடுத்த காரியத்தை விடாது முடிக்கும் வல்லவன் அவன். ஊரறிந்தவன். அவன் உனக்கு கணவனுகக் கிடைப்பது அரிது. தவறுதலாக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறான் யாராலோ......ஆத்திரத்தில் நம்பிவிட்டாய்"

"ஐயோ........" என்று அழுதாள்.

"சரி என்று சொல்லடி" என்றாள் லீலா.

"அண்ணா, தங்கள் விருப்பம்..." முற்றுப்புள்ளி யிட்டாள் மங்கை.

தினகரன் எதையும் செய்யத் தயாராகக் காத்துக் கிடந்தான், அவனை அழைத்தேன். மங்கையின் கரங்களைப்பிடித்துக் கொடுத்தேன்.

"மாநாடு நடத்தியதுபோதும்... இப்பெண்ணின் மனங்கோணாமல் வாழக் கற்றுக்கொள்!" என்றேன்.

இருவரும் சிரித்தனர். எனக்கும் அப்பொழுதுதான் சிரிப்புவந்தது... சிரிப்போடு, ஐயோ, அந்த லொக்...லொக்...லொக் தொடங்கிவிட்டது. நான் இருமினேன், இருமிக்கொண்டிருந்தேன். லீலா துணை செய்தாள். என்குரல் கேட்டு ஓடிவந்துவிட்டாள் பத்மா—அந்த பேசுந் தெய்வம்!

என்னைச் சிறுகச் சிறுகச் சாவை நோக்கி விரட்டிக்கொண்டிருக்கிறது அந்த இருமல்—மரணத்தின் ஏவலாளன்!

சாளரக் கதவுகள் திறந்து கிடந்தன.

காற்று சிலுசிலுவென அடித்தது. சூரியனின் மஞ்சள் கதிர்கள் உள்ளே நுழைந்து இந்த நோயாளியைத் தொட்டுப் பார்த்தன. நான் கட்டிலில் ஒரு பக்கத்தில் அடுக்கியிருந்த தலையணைகளில் சாய்ந்தபடியே வான வெளியைப் பார்த்தேன். நிர்மலமான நீல வானம். எங்கோ இரண்டொரு இடங்களில் மேகத் திட்டுக்கள். கதிரவன் தன் வேலையை முடித்துக்கொண்டு வேகமாக வீடு நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

வானம் வளைந்து வந்து பூமியின் ஒரு ஓரத்தில் ஒற்றைக்காலில் நின்று நர்த்தனம் புரிவது போலத் தெரிந்தது. குங்குமப்பூவை அள்ளித் தெளித்தது போன்ற சிகப்பு நிறப் படையெடுப்பு......இருள், இருள், அந்தச் செவ்வொளியின் பளபளப்பு அதிகரித்தது.

நான் சிலை போலானேன். அந்த செவ்வானத்தின் வனப்பில் சொக்கிப் போனேன். என்னை மறந்தேன். என் சுற்றிலுமுள்ள பொருள்கள் எதுவுமே என் கண்களில் படவில்லை.

என் தலையை யாரோ வருடுவது போலிருந்தது. திரும்பினேன். பத்மா நின்றாள்.

"பார், அடிவானத்தை! எவ்வளவு அழகு......" என்றேன்.

"கொள்ளை, கொள்ளை, அழகுக் கொள்ளை!" என்றாள் பத்மா.

தட, தட...பட்...பட்...காலடியோசைகள் கேட்டன.

பொன்னி வந்தாள். இடையிலே அவள் பெற்றெடுத்த—'ஆடும் தேன் ஜாடி'—சின்னஞ் சிறு வண்ணக் குழந்தையை ஏந்தியபடி நடந்து வந்தாள். வேறொரு கூடையில் — அதில் இந்த நோயாளி 'ஜீவனுக்கு' பழங்கள்......

"வாம்மா......" என்று வரவேற்றேன். பத்மா, குழந்தையை வாங்கி அணைத்துக்கொண்டாள். அது தன் பொக்கை வாய்ச் சிரிப்பைக் காட்டி எங்களை ஏதோ ஒரு வருணனைக்கு எட்டாத உலகத்திற்கு இழுத்துச் சென்றது.

ஏஜண்டுத் தோழர்களுக்கு

இது வரை பாக்கி அனுப்பாதிருக்கும் ஏஜண்டுத் தோழர்கள், பாக்கித் தொகையையும், தேவையான மலருக்குரிய தொகையையும் சேர்த்து அனுப்பத் தவறினுல் மலர் கண்டிப்பாய் அனுப்பப் படமாட்டாதென் பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்

நிர்வாகி,

"இதற்கு என்ன பெயர்?" என்றேன். நான்.

"நீங்களே சொல்லுங்கள்" என்றுள் பத்மா, சிறு சிரிப்பு தவழ.

நான் யோசித்தேன். பொன்னி மட்டும் வாட்டமாகவே இருந்தாள்.

"அடிவானம்........" என்று இழுத்தேன்.

"ஆம், ஆம்......" என்று ஆதரித்தனர் என் பிரேரேபணையை!

அடிவானத்தை என் கட்டிலின் மீது விட்டாள் பத்மா, அது சிரித்துக் கொண்டெ வந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டது. எனக்கு அதை வாரியணைத்து முத்தமிட வேண்டும் போலிருந்தது. ஆனுல் எப்பொழுதுமே இருமலுடன் போராடும் எனக்கு முத்தமிட சத்து ஏது......உரிமைதான் உண்டோ? ஆகவே அந்தக் குழந்தையை அதன் தாய் தூக்கிக் கொண்டாள்.

"பொன்னி......உன் முகத்தில் வாட்டம்?" என்றுள் பத்மா.

"பார்த்திபன் நலந்தானே?" என்றேன் நான்.

குபு, குபு,வென நீர் வடிந்தது அவள் கண்களில் ஏன் என்று எங்கள் இருவருக்குமே புரியவில்லே,

"ஏன்..."

"அக்கா..." என்று அலறிஞள். பத்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதாள். பத்மாவின் கண்களும் குளங்களாகி விட்டன. விபரந்தெரியால் நான் விழித்தேன்.

"பொன்னி, அவருக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டதா..." என்றுள் அவள் அழுகையைக் குயைத்த படி!

"உடலுக்கு வந்தாலும் சகித்திருப்பேன் அக்கா......"

"பின்......"

"என்னதான் சொல்லேன்....." இருவரும் கேட்டோம்.

"அவருக்கு....."என்று தொடங்கிஞள்.

தடதடவென ஓடி உள்ளே நுழைந்தான் பார்த்திபன். அவன் தலைமயிர் கலைந்து கிடந்தது. சட்டை அழுக்கேறிப் போயிருந்தது. அவன் முகத்தில் வியர்வை அரும்பியிருந்தது.

"பார்த்திபா......உட்கார்" என்றேன்.

அவன் மிரள மிரளப்பார்த்தான்,

"பத்மா......பொன்னி......உன் மனைவி....என் தங்கை.....மனைவி... தங்கை" என்று உளறிஞன்.

அந்தோ......பார்த்திபன் பைத்தியக் காரனுகி விட்டான்! அவன் புத்திபேதலித்துஉளறுகிருன். இனி அவன் சித்தம் சரி நிலையடையுமா? முடியாது!

"பார்த்திபா......"என்றேன் என் குரலை உயர்த்தி!

"சுந்தர்......" என்ருன் நான் அழைத்தபடியே!

"இப்படி அமைதியாக உட்கார்......" என்றேன்.

"நேரமில்லை நண்பா......நான் நெடுந் தொலைவு போக வேண்டும்"

"ஏன்?"

"ஏனு....பத்மா உன் மனைவி... பொன்னி என் தங்கை...என் மனைவியைநாடி யாத்திரை போகிறேன்"

"அவள் எங்கே இருக்கிருள்?"

"அதோ பார்"

சாளரத்தின் வழியாகச் செக்கச் சிவந்த அடிவானத்தைக் காட்டிஞன்.

"அங்கேயா போகிருய்?"

"ஆம், தோழா......அங்குதான் மேகத்தால் வீடு கட்டி, மின்னலால் கூரை வேய்ந்து, நட்சத்திரக் கதவிட்டு, நிலவு மாடி கட்டி நிற்கிருள் பார் என் மனைவி......"

உளறிக் கொண்டே ஓடிஞன். அவன் நிற்கவும் இல்லை. திரும்பிப் பார்க்கவுமில்லை.

பொன்னி கதறிஞள். பத்மாவின் கண்களிலிருந்த நீர் வற்றி விட்டது. என்னுல் இந்தக் காட்சியைப் பார்க்கவே முடியவில்லை. கண்களை மூடிக் கொண்டேன் கண நேரம்.

கண்களைத் திறந்தேன்.

அந்தப் பெண்கள் இருவரும் சாளரக் கம்பிகளைப் பிடித்த படியே நின்று கொண்டிருந்தார்கள்.

"யாரைப் பார்க்கிறீர்கள்?" என்றேன்.

"அவரை......"என்றனர் இருவரும்

"அவன் எங்கே செல்கிருன்" என்றேன் மீண்டும்.

"அடிவான யாத்திரை..." என்றுள் பொன்னி

"இல்லை" என்றேன் பெருமூச்சோடு

"பின்..." என்று கேட்டாள் பத்மா.

"இதோ அந்த அடிவானம்" என்று காட்டினேன் குழந்தையை.

இந்த நாடகத்தை உன்னிப்பாகக் கவனித்த அடிவானம் கை கொட்டி சிரித்தது. அடிவானத்தை இடுப்பிலேந்தி நடந்தாள் பொன்னி வழிவிட்டு வரச் சென்றுள் பத்மா.

ஐயோ ஆரம்பித்து விட்டது..... லொக்...லொக்...லொக்...

[முடிந்தது]

நேரு-தலைவரானர்!

ஆனுல்,
அதில் பொதிந்துள்ள சூட்சுமம்...?

இதை விளக்கும் சிறு ஏடு

"அதிர்ச்சிக்கு வைத்தியம்!"

(C. N. A. தீட்டியது)

விலை அணு 0—2—0

முத்து பதிப்பகம்—காஞ்சி.

மாநில மாநாட்டை **சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில்** நடத்த அனுமதி கிடைத்துள்ளது. மாவட்டப் பகுதிப் பணத்தை இம்மாத இறுதிக்குள்ளே அளித்து விடுவதாக மாவட்டச் செயலாளர்கள் உறுதி தந்துள்ளார்கள். பொதுச் செயலாளர் நிதி நிலைமையை நேரில் கவனிக்க சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். நெல்லை, திருச்சி மாவட்டங்களில் வசூலை எளிதாகவும், துரிதமாகவும் முடிக்க **கருணாநிதியின் 'வாழமுடியாதவர்கள்'** நாடகம் நடத்தப்பட விருக்கிறது. பாதி தொகையளித்த மாவட்டங்களில், தொகையை சேர்த்துக் கொண்டுள்ளனர். நாஞ்சிலில் நிதி சேர்ந்து விட்டது என்று அறிவித்து விட்டனர்.

தீரரே! வீரரே! சென்னைக்கு வாரீர்! வெற்றிப் பாசறை அமைப்போம்! வீரகீதம் பாடுவோம்!

★

சிங்கத் திராவிடரே செயலாற்றும் செம்மல்களே! சென்னையில் கூடும் மாநில மாநாடு காண வாரீர்!

விரைவில் மத்திய செயற்குழு கூடி, மாநாட்டின் மற்றைய வேலைகளைத் தொடங்கப் போகிறது. மாநாட்டுப் பணிகளை ஏற்று நடத்தும் வரவேற்புக்குழு, தலைவர், திறப்பாளர் இவர்களை தெரிந்தெடுத்து, தேதியும் நிர்ணயிக்க இருக்கிறது. மாநாட்டில் **பகுத்தறிவுக் கண்காட்சி** முக்கிய இடம் வகிக்கப் போகிறது. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியும் அவரது குழுவினரும் நடிக்கும் நாடகங்கள் மட்டுமல்லாமல், தெலுங்கு நாடகம் ஒன்றும், பெண்களே முழுப் பங்கேற்று நடத்தும் நாடகம் ஒன்றும், இன்னும் பல முக்கிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



Edited, Printed & Published by C. N. Annadurai M. A. at "DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram,